# டிபிகேஎல் கொள்முதல் விவகாரம்: குற்றச்சாட்டுகள் மீது இன்னும் முறையான விசாரணை ஆரம்பிக்கப்படவில்லை



புத்ரா ஜெயா, பிப். 8- கோலாலம்பூர் மாநகர் மன்றத்தால் (டிபிகேஎல்) செய்யப்பட்ட ஒரு 40 லட்சம் வெள்ளி கொள்முதல் ஒப்பந்தத்தில் புரியப்பட்டதாக கூறப்படும் தவறுகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் மீது மலேசிய ஊழல் தடுப்பு ஆணையம் (எம்ஏசிசி) இன்னும் ஒரு முறையான விசாரணையை ஆரம்பிக்கவில்லை என்று எம்ஏசிசி தலைவர் டான்ஸ்ரீ அஸாம் பாக்கி கூறினார்.

திரைப்பட தயாரிப்பாளரும் நடிகருமான டத்தோ அஃப்ட்லின் ஷங்கி உட்பட யாரையும் இந்த கட்டத்தில் விசாரணைக்காக எம்ஏசிசி அழைக்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பான ஆவணங்களை ஆணையம் இப்பொழுது ஆராய்ந்து வருகிறது என்பதையும் ஒரு முறையான விசாரணை ஆரம்பிக்கப்படவில்லை என்பதையும் அஸாம் உறுதிப்படுத்தினார்.

எம்ஏசிசி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் இதனை தெரிவித்தார்.

டிபிகேஎல்லின் உள் விசாரணையில் பெறப்பட்ட ஆவணங்கள் இன்னும் ஆராயப்பட்டு வருகின்றன என்பதை அவர் மேலும் தெளிவுப்படுத்தினார்.

கூட்டக்குறிப்புகள் மற்றும் சம்பந்தப்பட்ட பதிவுகள் உட்பட டிபிகேஎல்லின் உள் விசாரணை ஆவணங்களை எம்ஏசிசி அண்மையில் பெற்றதாக அஸாம் தெரிவித்தார்.